## அகழாய்வு (இயல்-3)

## ( துணைப்பாடம் )

முன்னுரை:-

தமிழகத்தில் பண்டைக் காலத்திலேயே நமது தமிழ் முன்னோர்கள் செம்மையான பண்பாட்டுக் கட்டமைப்போடு வாழ்ந்திருக்கிறார்கள். நாம் தான் நம் தொன்மை வரலாற்றின் உண்மையை அறியாமல் தொடர்ச்சி அறுபட்டு இடையில் பாதை மாறிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம் .

அகழாய்வின் நோக்கம் :-

மக்கள் அறிவியல் என்ற சிந்தனையைப் புரிந்துகொள்வதற்கும் ,நமது பண்பாட்டின் மேன்மைகளை இன்றைய தலைமுறைக்கு எடுத்துக் கொண்டு சிறப்பாக வாழ்வதுமே அகழாய்வின் நோக்கமாகும் .

அகழாய்வின் தொடக்கம் :-

1863 - ல் அகழாய்வு தொடங்கப்பட்டது. இவ்வாண்டில் 'இராபர்ட் புரூஸ்பட் என்னும் தொல்லியல் அறிஞர் ,பல்லாவரத்தில் எலும்பையும் , கற்கருவியையும் கண்டுபிடித்தார். ரோமானியர்களின் பழங்காசுகளும் கண்டெடுக்கப்பட்டது .இவ்வாறு இன்று கீழடி வரை அகழாய்வுதொடர்கின்றது.

அகழாய்வின் பயன்கள் :-

கடந்த காலத்தை ஆராய்ந்து பார்த்தால் தான் நிகழ்காலத்தைச் செம்மைப் படுத்திக் கொள்ளலாம் .வருங்காலம் வளமாக அமைவதற்கு நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவை வகைப்படுத்தி தொகுத்துப் பார்ப்பதற்கும் அகழாவாய்வே பயனுள்ளதாக அமைகின்றது.

நமது வளமான வரலாற்றையும், பண்பாட்டையும் அறிந்துகொள்ளமுடியும். பழமையான பட்டையை உரித்துக்கொண்டு புதுமை பிறக்க அகழாய்வு பயனுள்ளதாக இருக்கும். புதுமைக்கென்று வேரோ,விதையோ கிடையாது .எனவே அகழாய்வு இன்றியமையாதது.

அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்:-

சென்னையில் உள்ள பல்லாவரம், அரிக்கமேடு, கோவை ஆதிச்சநல்லூர் ,மதுரை நகருக்கு அருகே உள்ள கீழடி ஆகியவை அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட தொன்மையான இடங்களாகும் .

அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் :

சுடுமண் ,கல் இரும்பு, செம்பு ஆகியவற்றாலான பொருட்கள் ,கருவிகள் உறைகிணறுகள் ,மான் கொம்புகள் ,சோழிகள், சதுரங்கக் காய்கள் ,செங்கல் கட்டுமானங்கள் ஆகியன அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட அரிய வகை பொருட்கள் ஆகும் .

முடிவுரை :- அகழாய்வு செய்தல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பகுதியில் செதுக்கிச் செதுக்கி ஆராய்தல் ஆகும் .அகழாய்வு ,வரலாறு முழுமை பெற உதவுகிறது. அகழாய்வில் கிடைத்த பொருட்கள் நாம் வாழ்ந்த காலத்தை மட்டுமின்றி நமது வரலாற்றினை உணர்த்துகின்றன.

.